# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097160

1. District : நாகப்பட்டினம்
மாவட்டம்

PS: ஊழல் தடுப்பு [illegible]
காவல்நிலையம்

Year: 2020 FIR No.: 03/2020 Date: 23.10.2020
ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: CrPC and Sections பிரிவுகள்: 102 CrPC and 7, 7 A and
(ii) Act சட்டம்: P.C. Act Sections பிரிவுகள்: 12 of PC Act 1988 as
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: amended by PC (Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள் 22.10.2020
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 20.00 Hrs
Time to : நேரம் வரை 23.00 Hrs.
(b) Information Received at PS. Date :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.10.2020
Time : நேரம் 03.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written / Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 10 km தென்மேற்கு, ஏரத்தூர்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண் : 012.
(c) In case outside limit of this Police Station, then the Name of P S
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T.T. சண்முகம்
(b) Father's/ Husband's Name :
தந்தை / கணவர் பெயர் தியாகராஜன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 53/2020
(d) Nationality : நாட்டினம் இந்தியா
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் (கு.பொ.) நாகப்பட்டினம், [illegible] மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.
(g) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. C. மாதவன், த/பெ. சந்திரசேகரன், 2 [illegible] பொறுப்பு நெல் பட்டியல் எழுத்தர். 2. திரு. கண்மணி த/பெ. [illegible] சுமை தூக்கும் பணியாளர் மேஸ்திரி,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

- இல்லை -

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து அனுப்பப்படுகிறது**

இன்று 23.10.2020-ம் தேதி 03.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது நாகப்பட்டினம் தற்காலிக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.T.சண்முகம், தனிவட்டாட்சியர் (ச.பா.தி.), வட்ட அலுவலகம், நாகப்பட்டினம் அவர்கள் அளித்த அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு அனுப்புநர் திரு.T.சண்முகம், தனிவட்டாட்சியர்(ச.பா.தி.), வட்ட அலுவலகம், நாகப்பட்டினம், தற்காலி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு நாகப்பட்டினம். அய்யா, நாகப்பட்டினம் மாவட்டம் தனிவட்டாட்சியர் (ச.பா.தி) ஆகிய நான் தற்காலிகமாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 22.10.2020-ந்தேதி மாலை 20.00 மணி முதல் 23.00 மணி வரை நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, ஓரத்தூர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண் 012-ல் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது ஓரத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Name: பெயர் M. ARVLPRIYA
Rank: நிலை INSPECTOR OF POLICE
V&AC, NAGAPATTINAM.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.2020

திரு.C.மாசிலாமணி த/பெ. சந்திரசேகரன் என்பவரை சோதனை மேற்கொண்டபோது ரூபாய் 13,580/- யையும், மற்றும் திரு.C.மாசிலாமணி அவர்கள் அமர்ந்திருந்த டேபிளுக்கு எதிரே சுமார் 10 அடி தூரத்தில் நின்றிருந்த திரு.C.மாசிலாமணி, உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் அவர்களின் இருசக்கர வாகனம் TN51 AL2350 HONDA ACTIVA வண்டியின் இருக்கைக்கு அடியிலுள்ள, பொருட்கள் வைக்குமிடத்தில் இருந்த பணம் ரூபாய் 39,500/- யையும், மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சுமை தூக்கும் பணியில் இருந்த மொத்தம் 8 சுமை தூக்கும் பணியாளர்களை சோதனை செய்ய சுமை தூக்கும் பணியாளர்/மேஸ்திரி திரு. G.கலைமணி த/பெ கோவிந்தசாமி, தெற்குதெரு, ஒரத்தூர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரிடமிருந்து ரூபாய் 35,150/- யையும், ஆகக்கூடுதல் ரூபாய் **88,230/-** பணத்தையும் கைப்பற்றி மேற்படி நபர்களிடம் பணம் பற்றி விசாரிக்க அவர்கள் சரியான முகாந்திரம் சொல்லாததால் உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் திரு.C.மாசிலாமணி மற்றும் சுமைத்தூக்கும் பணியாளர்/மேஸ்திரி திரு.G.கலைமணி ஆகியோர் குற்றமுறு நடவடிக்கை மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நெல் மூட்டைகள் போட வருபவர்களிடம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இத்திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் ரூ.**88,230/-**, தயார் செய்யப்பட்ட நடவடிக்கை மற்றும் மகஜர், திரு.C.மாசிலாமணி மற்றும் திரு.G.கலைமணி ஆகியோர் தாளாக முன்வந்து கொடுத்த வாக்குமூலம், மற்றும் திடீர் சோதனையின்போது கைபற்றிய ஆவணங்கள் 1)ஒரத்தூர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண் 012 கொள்முதல் அலுவலர், பட்டியல் எழுத்தர் மற்றும் இரவு காவலர் ஆகியோர்களின் வருகைப்பதிவேடு 2)சுமைத்தூக்கும் பணியாளர்களின் வருகைப்பதிவேடு, 3)Paddy Analysis Register, 4)Token Register. ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர்படுத்துகிறேன். எனவே உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் திரு.C.மாசிலாமணி த/பெ சந்திரசேகரன் மற்றும் சுமை தூக்கும் பணியாளர்/மேஸ்திரி திரு. G.கலைமணி த/பெ கோவிந்தசாமி, தெற்குதெரு, ஒரத்தூர், நாகப்பட்டினம் மாவட்டம் ஆகியோர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். S/d T.சண்முகம், 23.10.2020, தனிவட்டாட்சியர் (ச.பா.தி), வட்ட அலுவலகம் நாகப்பட்டினம், தற்காலிக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம், தற்காலிக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள். இன்று 22.10.2020 ஆம் தேதி இரவு சுமார் 20.00 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, ஒரத்தூர் பெருமாள் கோவில் தெற்குதெருவில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண்-012 என்ற நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை திரு.T.சண்முகம், த/பெ.தியாகராஜன், தனிவட்டாட்சியர், வட்ட அலுவலகம், நாகப்பட்டினம்

மற்றும் தற்காலிக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.M.அருள்பிரியா மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தற்காலிக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.T.சண்முகம் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. இன்று 22.10.2020 ஆம் தேதி இரவு சுமார் 20.00 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, ஓரத்தூர் பெருமாள் கோவில் தெற்குதெருவில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண்-012 என்ற நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை திரு.T.சண்முகம், த/பெ.தியாகராஜன், தனிவட்டாட்சியர், வட்ட அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.M.அருள்பிரியா மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தற்காலிக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.T.சண்முகம் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, ஓரத்தூரில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் பெருமாள் கோவில் தெற்குவீதி சாலையின் வடக்கு பக்கம் உள்ள ஓரத்தூர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண்-012 என்ற நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகளின் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்வதற்கு ஓரத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலைய பட்டியல் எழுத்தர் அவர்கள், சுமைதூக்கும் பணியாளர்கள் மூலமாக விவசாயிகளிடம் மூட்டைகளை கொள்முதல் செய்வதற்கு கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், மேற்படி பொது பணியாளருக்காக, நெல் மூட்டைகளை போடுவதற்கு வரும் விவசாயிகளிடம் சுமைதூக்கும் பணியாளர்கள் கையூட்டு கேட்டுப்பெற்று மேற்படி பொது பணியாளருக்கு கொடுப்பதாகவும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 22.10.2020 ஆம் தேதி நாகப்பட்டினம் மாவட்ட தற்காலிக ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய என்னிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், நாகப்பட்டினம் மாவட்ட தற்காலிக ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் மாலை சுமார் 18.00 மணிக்கு புறப்பட்டு நாகப்பட்டினம் லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 18.30 மணிக்கு வந்தும், அங்கிருந்து திரு.M.அருள்பிரியா, காவல் ஆய்வாளர் சகிதம் அரசு வாகனத்தில் நாகப்பட்டினம் லஞ்சஒழிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 22.10.2020 ஆம் தேதி இரவு சுமார் 19.00 மணிக்கு புறப்பட்டு ஓரத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு 20.00 மணிக்கு வந்தும், மேற்படி லஞ்ச ஒழிப்பு குழுவினர் சகிதம் ஓரத்தூர் நேரடி நெல்

கொள்முதல் நிலையத்தில் பணியிலிருந்த உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் திரு.C.மாசிலாமணி என்பவரிடம் திடீர் ஆய்வு விபரம் தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி ஒரத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலையமானது, நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, ஒரத்தூர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் பெருமாள் கோவில் தெற்குவீதி சாலையின் வடக்கு பக்கம் உள்ள ஒரத்தூர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண்-012 என்ற நேரடி நெல் கொள்முதல் நிலையம் சந்துருபிள்ளை என்பவரின் பழைய பாழடைந்த வீட்டின் தெற்கு பக்க சுவற்றில் சாய்ப்பு போடப்பட்ட கீற்றுக் கொட்டகையாக அமைந்துள்ளது. மேற்படி ஒரத்தூர் நேரடி நெல் கொள்முதல் நிலையமானது கிழக்கு பக்கம் பார்த்த நுழைவு வாயிலுடன் கூடிய மண்தரையுடன் கூடிய ஒரே ஓட்டமாக உள்ளது. அதன் நடுவில் டேபிளும், டேபிளில் கிழக்கு பக்கம் பார்த்தவாறு உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் திரு.C.மாசிலாமணி அவர்கள் பிளாஸ்டிக் சேரில் அமர்ந்திருந்தார். அந்த கீற்று கொட்டகைக்கு எதிரே சாலையை அடைத்தார்போல் தகர சீட்டு போடப்பட்ட நாற்புரமும் திறந்தநிலையிலுள்ள கொட்டகையும், அதில் பாதையை விடுத்து இருபுறத்திலும் நெல் மூட்டைகள் சுமார் 5836 மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தெருவின் இருபுறத்திலும் கொள்முதல் செய்யப்படாத விவசாயிகளின் நெல்மூட்டைகள் சுமார் 400 மூட்டைகள் ஆங்காங்கே அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் திடீர் ஆய்வின்போது உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் திரு.C.மாசிலாமணி என்பவர் அவரது இருக்கையிலும், நெல்மூட்டைகள் பிடிக்கும் இடத்தில் 1)திரு.G. கலைமணி, வயது.45/2020, சுமைதூக்கும் பணியாளர்/மேஸ்திரி, த/பெ. கோவிந்தசாமி, தெற்குதெரு, ஒரத்தூர், 2)திரு.G.வீரமணி, வயது.33/2020, சுமைதூக்கும் பணியாளர், த/பெ.குணசேகரன், பெருமாள்கோவில் தெற்குதெரு, ஒரத்தூர், 3)திரு.M.சுகுமார், வயது.33/2020, சுமைதூக்கும் பணியாளர், த/பெ.மாரிமுத்து, தெற்குதெரு, ஒரத்தூர், 4)திரு.P.பாஸ்கரன், வயது.55/2020, சுமைதூக்கும் பணியாளர், த/பெ.பக்கிரிசாமி, ராமர் மடத்தெரு, ஒரத்தூர், 5)திரு.J.ராதாப்பாண்டியன், வயது.55/2020, சுமைதூக்கும் பணியாளர், த/பெ.ஜெகநாதன், வடக்குதெரு, ஒரத்தூர், 6)திரு.L.ராஜா, வயது.36/2020, சுமைதூக்கும் பணியாளர், த/பெ.லட்சுமணன், ராமர் மடத்தெரு, ஒரத்தூர், 7)திரு.C.பழனியப்பா, வயது.42/2020, சுமைதூக்கும் பணியாளர், த/பெ.சின்னதம்பி, வடக்கு தெரு, ஒரத்தூர், 8)திரு.V.ராஜேந்திரன், வயது.60/2020, சுமைதூக்கும் பணியாளர், த/பெ.வடிவேலு, பெருமாள் தெற்குதெரு, ஒரத்தூர் மற்றும் விவசாயி 9)திரு.பாலாஜி, த/பெ.கண்ணன், புலியூர் ஆகியோர் இருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த

இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சரியான முகாந்திரம் கூறிய தொகை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் மற்றும் சுமைதூக்கும் பணியாளர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.88,230/-ம்** திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | **பெயர், பதவி மற்றும் முகவரி** | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்டரூபாய் |
|---|---|---|---|
| 1 | திரு.C.மாசிலாமணி, உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் அவர்களிடம் இருந்தது. | - | 13,580 |
| 2 | திரு.C.மாசிலாமணி, உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் அவர்களின் இருசக்கர வாகனம் TN51 AL2350 HONDA ACTIVA வண்டியின் இருக்கைக்கு அடியிலுள்ள பொருட்கள் வைக்குமிடத்தில் இருந்த பணம் | 50 | 39,500 |
| 2 | சுமைதூக்கும் பணியாளர்/மேஸ்திரி, திரு.G. கலைமணி, த/பெ.கோவிந்தசாமி, ஓரத்தூர். | - | 35,150 |
| 3 | சுமைதூக்கும் பணியாளர், திரு.G.வீரமணி, த/பெ.குணசேகரன், ஓரத்தூர். | 210 | - |
| 4 | சுமைதூக்கும் பணியாளர், திரு.M.சுகுமார், த/பெ.மாரிமுத்து, ஓரத்தூர். | - | - |
| 5 | சுமைதூக்கும் பணியாளர், திரு.P.பாஸ்கரன், த/பெ.பக்கிரிசாமி, ஓரத்தூர். | - | - |
| 6 | சுமைதூக்கும் பணியாளர், திரு.J. ராதாப்பாண்டியன், த/பெ.ஜெகநாதன், ஓரத்தூர். | - | - |
| 7 | சுமைதூக்கும் பணியாளர் திரு.L.ராஜா, த/பெ.லட்சுமணன், ஓரத்தூர். | - | - |
| 8 | சுமைதூக்கும் பணியாளர், திரு.C.பழனியப்பா, த/பெ.சின்னதம்பி, ஓரத்தூர். | - | - |
| 9 | சுமைதூக்கும் பணியாளர், திரு.V.ராஜேந்திரன், த/பெ.வடிவேலு, ஓரத்தூர். | - | - |
| 10 | விவசாயி திரு.பாலாஜி, த/பெ.கண்ணன், புலியூர் | 1,300 | - |
| | **மொத்தம்** | **1,560** | **88,230** |

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அந்த பணத்திற்குண்டான சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அந்த பணம் ரூபாய் 1,560/- அவரவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. சுமைதூக்கும் பணியாளர்/ மேஸ்திரி, திரு.G.கலைமணி, த/பெ.கோவிந்தசாமி, ஒரத்தூர் என்பவர் அண்ட்ராயர் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 35,150/- பற்றி விளக்கம் கேட்க அந்த பணம் விவசாயிகளிடம் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்வதற்கு அவர்களிடம் கடந்த ஒருவாரமாக பெற்ற பணம் என்றும், அந்த பணம் அனைத்து சுமைதூக்கும் பணியாளர்களுக்கும் உண்டான பணம் என்றும், கடந்த ஒரு வாரமாக யாருக்கும் பிரித்து கொடுக்காமல் வைத்திருந்த பணம் என்றும் தெரிவித்தார் மற்றும் உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் திரு.C.மாசிலாமணி அவர்களின் பேண்டின் பின்பக்க பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 13,580/- மற்றும் திரு.C.மாசிலாமணி அவர்கள் அமர்ந்திருந்த டேபிளுக்கு எதிரே சுமார் 10 அடி தூரத்தில் நின்றிருந்த திரு.C.மாசிலாமணி, உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் அவர்களின் இருசக்கர வாகனம் TN51 AL2350 HONDA ACTIVA வண்டியின் இருக்கைக்கு அடியிலுள்ள, பொருட்கள் வைக்குமிடத்தில் இருந்த பணம் ரூபாய் 39,500/- பற்றி விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் கூறாததால் அந்ததொகை விவசாயிகளிடம் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய விவசாயிகளிடம் கையூட்டாக பெற்ற தொகையாக இருக்கலாம் மற்றும் பட்டியல் எழுத்தருக்கு சலுகை செய்யவேண்டி, பட்டியல் எழுத்தருக்கும், சுமைதூக்கும் பணியாளர்களுக்கும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.88,230/-** மற்றும் 1)ஒரத்தூர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண் 012 கொள்முதல் அலுவலர், உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர் மற்றும் இரவு காவலர் ஆகியோர்களின் வருகைப்பதிவேடு, 2)சுமைத்தூக்கும் பணியாளர்களின் வருகைப்பதிவேடு, 3)Paddy Analysis Register, 4)Token Register ஆகிய 4 ஆவணங்கள் இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது ஒரத்தூர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் இன்றைய தினம் ஒவ்வொரு நெல் மூட்டையும் 40 கிலோகிராம் எடை கொண்டதாக 346 நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது என்றும், சுமைதூக்கும் பணியாளர்கள் மொத்தம் 12 நபர்கள் என்றும், அதில் 4 நபர்கள் மாலை அனுமதி பெற்று சென்றுவிட்டதாகவும் பட்டியல் எழுத்தர் திரு.C.மாசிலாமணி அவர்கள் தெரிவித்தார். திடீர் ஆய்வின் போது மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் 1)திரு.C.மாசிலாமணி, உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர், நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண்-012, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஒரத்தூர் மற்றும் 2)சுமைதூக்கும் பணியாளர்/ மேஸ்திரி,

திரு.G.கலைமணி, த/பெ.கோவிந்தசாமி, ஓரத்தூர் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 22.10.2020 ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இன்று **23.10.2020-ந்தேதி 03.00** மணிக்கு மேற்படி புகாரைப் பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2020, U/s.102 Cr.P.C. and Section 7, 7-A and 12 of Prevention of Corruption Act, 1988 as amended by PC(Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(M.ARULPRIYA)
காவல் ஆய்வாளர் 23/10/2020
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
நாகப்பட்டினம்.

முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் மகஜர், எதிரி 1) திரு.C.மாசிலாமணி, உதவுபவர் பொறுப்பு தற்காலிக பட்டியல் எழுத்தர், நேரடி நெல் கொள்முதல் நிலையம் எண்-012, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஓரத்தூர்,நாகப்பட்டினம் மாவட்டம், 2)சுமைதூக்கும் பணியாளர்/ மேஸ்திரி, திரு.G.கலைமணி, த/பெ.கோவிந்தசாமி, ஓரத்தூர், நாகப்பட்டினம் மாவட்டம் ஆகியோர்களின் வாக்குமூலம் ஆகியவற்றை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பித்தும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(M.ARULPRIYA)
காவல் ஆய்வாளர், 23/10/2020
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
நாகப்பட்டினம்.